**கோறளைப்பற்று பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1 நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 19 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்டோபர் 12 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கோறளைப்பற்று பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடு

மீளாய்வாண்டில் பெறப்பட்ட குத்தகை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டண வருமானங்கள் ரூபா 545,500 வருமானக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளதால் மீளாய்வாண்டிற்கான வருமானம் இத்தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 27,630,462 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் அதற்கு நேர் முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 12,468,433 ஆக இருந்தது.

### 2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சபையினால் பேணப்படும் காசேட்டின் படி மீளாய்வாண்டின் ஒவ்வொருமாத இறுதியிலும் ரூபா 25.65 மில்லியன் முதல் ரூபா 29.66 மில்லியன் வரையான வீச்சில் காசு மீதி காணப்படுகின்றது. இதனை வட்டி உழைக்கும் நிலையான வைப்பு அல்லது அழைப்பு வைப்புக்களில் முதலீடு செய்து வருமானத்தை உழைக்க நடவடிக்கை எடுக்காததால் சபையானது வருடத்திற்கு அண்ணளவாக ரூபா 2.75 மில்லியன் தொகை வட்டி வருமானத்தை இழந்து வருகின்றது.

**2.3 வருமான முகாமைத்துவம்**

--------------------------------

**2.3.1 முத்திரைக் கட்டணம்**

---------------------------

மாகாண திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய முத்திரைக் கட்டண நிலுவை ரூபா 12,548,980 தொகையினை அறவிட 2017 மே 31 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம் இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையில் பதிவுசெய்யப்பட்ட உல்லாச விடுதிகளிடமிருந்து அவற்றின் மொத்த வருமானத்தில் 01 சதவீதம் தீர்வையாக அறவிடப்படவேண்டிய போதிலும், இலங்கை உல்லாசப் அவ்வாறு பதிவு செய்யப்பட்டு பாசிக்குடா பிரதேசத்தில் இயங்கி வரும் பதினைந்து உல்லாச ஹோட்டல்களிலிருந்து தீர்வைகள் 2017 மே 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு நலன்விரும்பி ஒருவரினால் 1980 யூலை 06 ஆந் திகதி 4772 ஆம் இலக்க உறுதி மூலம் அன்பளிப்புச் செய்யப்பட்ட 14 பேர்ச் அளவான காணியைப் பொறுப்பேற்று பராமரிக்கத் தவறியதன் காரணமாக தனிப்பட்டவர்களால் அக் காணி ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் சபையினால் இன்றுவரை இது தொடர்பாக எதுவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை**

-----------------------------------------

மீளாய்வாண்டில் ரூபா 1,998,000 செலவில் குழாய்கள் பொருத்தப்பட்டு நாசிவன் தீவிலுள்ள 36 குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வரும் நீர் குடிப்பதற்குப் பொருத்தமற்றது என 2016 மே 27 இல் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கை சுட்டிக்காட்டியிருந்தது. எனினும், நீரை சுத்திகரித்து வழங்குவதற்கோ அல்லது பொருத்தமான மாற்றுவழிகளை மேற்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக அந் நீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

**3.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட வரிப்பணத்திலிருந்து ஏனைய நிறுவனங்களுக்கு கடன் வழங்குதல் சபையின் குறிக்கோள்களுக்கு அப்பாற்பட்ட ஒரு விடயமாக இருந்த போதிலும் ஏறாவூர் நகர சபையினால் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும் அலுவலக கட்டிட வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஆளுனர் அல்லது மாகாண திறைசேரியின் அங்கீகாரமின்றி சபையினால் ஏறாவூர் நகர சபைக்கு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 10 மில்லியன் கடனாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2002 ஆம் ஆண்டு வரை சபைக்குச் சொந்தமான காணியில் இயங்கி வந்த அலுவலகம் அவ் ஆண்டில் நிலவிய யுத்த சூழ்நிலையின் காரணமாக எரிக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட அக் காணியில் புதிய சந்தைக் கட்டிடத்தை ரூபா 6,290,000

கிரயத்தில் நிர்மாணிப்பதற்காக இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரரால் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு ரூபா 1,062,663 பெறுமதியான வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் குறித்த காணி அப்பிரதேசத்திலுள்ள பள்ளிக்குச் சொந்தமானது என உரிமை கோரப்பட்டதனால் நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டன. எனினும், அக்காணியின் உரிமையினை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்கள் எதுவும் சபையிடம் காணப்படாததால் சந்தையை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவாக மாறியுள்ளது.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

**பாதைகளுக்கு கிறவல் இடல்**

பொது நிதியினை வினைத்திறனாகப் பயன்படுத்தும் குறிக்கோளுடன் மாகாண அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கும் அதிக காலம் பயன்படுத்தக்கூடிய கார்பட் இடுதல், கொங்கிறீட் இடுதல், மற்றும் தார் பூசுதல் தவிர்ந்த கிறவல் போடுதல் போன்ற தற்காலிக பாதை அமைத்தலை செய்யாதிருக்க வேண்டுமென 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய 2016/01 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதனைப் பொருட்படுத்தாது மீளாய்வாண்டில் சபையினால் 02 வீதிகளுக்கு ரூபா 798,150 செலவில் கிறவல் இடப்பட்டிருந்தது.

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 நொவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம், அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்ளும் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நிதி ஒதுக்கீட்டிற்கான அங்கீகாரமும் பெறப்பட்ட பின்னரே ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்படவேண்டிய போதிலும், அவ்வாறான முன் அனுமதியும் அங்கீகாரமும் பெறப்படாது 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 63 ஊழியர்கள் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(ஆ) 2011 பெப்ரவரி 24 ஆம் திகதிய 02/2011 ஆம் இலக்க ஓய்வூதிய திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுகின்ற ஊழியர்களுக்காக ஊழியர்களின் 8 சதவீத பங்களிப்புப் பணத்தையும் தொழில் தருனரினால் 12 சதவீத பங்களிப்பு பணத்தையும் அரச சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். எனினும், 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட 63 ஊழியர்களுக்கு அவ்வாறு பங்களிப்புப் பணம் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

**4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட ஒழுங்கீனங்கள் மற்றும் குறைபாடுகள் சம்பந்தமாக சபையினால் இதுவரை சீர் செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்பட்டுள்ளன.

| அறிக்கைக்கான தொடர்பு | | உள்ளடக்கப்பட்ட விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2015 | 2.2.3 | பதவியினர் கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| 2015 | 2.2.4 (அ) | பிணைப் பணம் பெறவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணம் பெறப்பட்டிருக்காமை. |

## 5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம் | திண்மக் கழிவுகளை மீள் சுழற்சி செய்ய நடவடிக்கை எடுத்தல். |